REPORTING SECTION

5. அரசினர் மசோதா.

தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் மசோதா. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது விவாதத்தைத் துவக்கி வைப்பார்கள்.

DR. H. V. HANDE : By way of a point of order may I make a suggestion to this House? Because we are going to take up the Electricity Board budget shortly and the question of river waters is intimately connected with this budget, may we request the Chief Minister to give us some statement or some explanation with regard to the river water pact ? It will be useful to us and information about it is not contained in the speech of the Minister for Electricity circulated to the Members. If a statement is made, the discussion will be meaningful.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களை இது எப்படி ஒழுங்குப் பிரச்னையின்கீழ் வரும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். வேறு பொருள்களைக் குறித்து மு.ப. 10
சொல்வதற்கு இந்த ஒழுங்குப் பிரச்னை விதியைப் பயன்படுத்திக் கொள்வது முறையாகாது. இப்பொருள் குறித்து ஒழுங்குப் பிரச்னை எழுப்பி கூறுவது முறை அல்ல.

மாண்புமிகு திரு. ஒ. பி. ராமன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1968-69-ம் ஆண்டு துணை